# முதியோரை ஆதரிக்கிறோம்

## முதியோர் தன்னம்பிக்கையுடன் மூப்படைய உதவுகிறோம்

### சுகாதாரப் பராமரிப்பு மற்றும் முதியோர் பராமரிப்பு ஆதரவு

- சமூக சுகாதார உதவித் திட்டம் (சாஸ்), மெடிஷீல்டு லைஃப், முன்னோடித் தலைமுறைத் தொகுப்புத்திட்டம், மெர்டேக்கா தலைமுறைத் தொகுப்புத்திட்டம் ஆகியன சுகாதாரப் பராமரிப்புச் செலவுகளுக்கு **நம்பிக்கையளிக்கும்**
- **கேர்ஷீல்டு லைஃப்** மற்றும் **நீண்டகாலப் பராமரிப்பு ஆதரவு நிதி**, நீண்டகாலப் பராமரிப்புக்கு உதவி வழங்கும்
- **மூத்தோர் நடமாட, இயங்க உதவி நிதி**, துணைக் கருவிகளுக்கும் இல்ல சுகாதாரப் பராமரிப்புப் பொருட்களுக்கும் ஆதரவு வழங்கும்

### மத்திய சேமநிதி ஓய்வுக்காலக் கணக்கில் இணைச் சேமிப்புத் திட்டம்

- அரசாங்கம் 2021 முதல் 2025 வரை **மத்திய சேமநிதி ஓய்வுக்காலக் கணக்கில்**, **வெள்ளிக்கு வெள்ளி அடிப்படையில்**, ஆண்டுக்கு அதிகபட்சம் $600 **தொகை நிரப்பும்**
- 5 ஆண்டு காலத்தில் **அதிகபட்சம் $3,000** வரையிலான சேமிப்புக்கு இணைத்தொகை

### மூத்தோர் ஆதரவுத் திட்டம்

- 2021 முதல் காலாண்டுக்கு ஒருமுறை **$900 வரையிலான** ரொக்க வழங்குதொகைகள்
- மொத்த மத்திய சேமநிதி சந்தா வரம்பு $70,000-லிருந்து **$140,000** ஆக உயர்த்தப்படுகிறது
- தனிநபர் மாதாந்தர குடும்ப வருமானம் $1,300-க்கு மேலாக, ஆனால் $1,800-க்கு மேற்போகாத தகுதிபெறும் மூத்தோர்களுக்குப் **புதிய வழங்குதொகை பிரிவு** அறிமுகம்

### பராமரிப்பு மற்றும் ஆதரவுத் தொகுப்புத்திட்டம்

- 50 வயதும் அதற்கு மேலான வயதுமுள்ள சிங்கப்பூரர்கள் அனைவருக்கும் 2020-ல் **$100 ரொக்கம்** (பேஷன் அட்டை நிரப்புத்தொகைக்குப் பதிலாக)

### மூத்தோருக்கான மின்னிலக்கமயமாதல் இயக்கம்

- மூத்தோர்களின் **மின்னிலக்க அறிவாற்றலை வளர்ப்பதற்கு** நேர்முகப் பயிற்றுவிப்பு மற்றும் சிறிய குழுக்களுக்கான கற்றல் அங்கங்கள்
- குறைந்த வருமானம் ஈட்டும் மூத்தோர்கள் சொந்த சாதனம் வாங்க **நிதி ஆதரவு**

gov.sg
MOF MINISTRY OF FINANCE SINGAPORE